மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.

அ.வ.எண்.84/2019.

குமாரசாமி. ..வாதி

/எதிர்/

S.A. உறிப்துல் கரீம் மற்றும் ஒருவர் ..பிரதிவாதிகள்

<u>ஸ்தாவர சொத்துக்களின் மதிப்பீடு விபரப் பட்டியல்</u>

| பிரிவு | பரிகாரம் | ஆள் வரை மதிப்பு ரூ. | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 42 | ஏற்றதை ஆற்றுக | 75,000.00 | 2250.00 |
| 25(டி) | விளம்புகை | 5,000.00 | 150.00 |
| | | மொத்தம் | 2400.00 |

செலுத்தப்பட்டுள்ளது.

/உத்தரவு படி/

(sd) D. Sathiabama

தலைமை எழுத்தர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தான்குளம்.
முன்னிலை:– திரு.ப. ரமேஷ், பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தான்குளம்.
2021 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை.
அ.வ.எண்.84/2019.

தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா, திருப்பணி புத்தன்தருவை, பெரிய தெருவில் கதவிலக்கம் 3/87 என்ற முகவரியில் வசிக்கும், அருணாச்சல நாடார் குமாரர், இந்து., சுமார் 68 வயதுள்ள, குமாரசாமி.
..வாதி

/எதிர்/

1. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா, திருப்பணி புத்தன் தருவை, கதவு எண்.1/150, பெரியபள்ளி வாசல் தெருவில் வசிக்கும், செய்யது அகமது குமாரர், இஸ்லாமியர், சுமார் 80 வயதுள்ள,S.A. உறிப்துல் கரீம்.
2. தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா, திருப்பணி புத்தன் தருவை, மாயாண்டி நாடார் தெருவில் வசிக்கும், பாண்டி நாடார் குமாரர், இந்து, சுமார் 50 வயதுள்ள, காமராஜ். .. பிரதிவாதிகள்

1–ம் எதிர்வாதியால் 01.03.17–ல் ஏற்படுத்தப்பட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஆவணத்தினை சமூகம் நீதிமன்றம் குறிப்பிடுகிற தேதிக்கு 1&2 எதிர்வாதிகளை தனது வாதி பெயருக்கு கிரையப் பத்திரம் பதிவு செய்து கொடுக்க உத்தரவிடும் படிக்கும், 28.12.17–ல் நாளிட்ட 2ம் எதிர்வாதி பெயரில் ஏற்பட்ட கிரையம் வாதியை கட்டுப்படுத்தக் கூடியதல்ல என விளம்புகை செய்யும் படிக்கும், வழக்கின் செலவுத் தொகைக்கும் தீர்ப்பாணை பிறப்பிக்கக் கேட்டு வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள்:– 29.07.2019 மற்றும் 04.11.2019.

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்:– 04.11.2019.

தாவா உண்டாகக் காரணமான நாள்:– 01.03.2017 முதலும், 19.08.2018 முதலும், 21.08.2018 முதலும், 15.01.2019 முதலும் 20.01.2019 முதலும் சாத்தான்குளம் தாலுகா, திருப்பணி புத்தன்தருவையில் வைத்து உண்டாகி இருக்கிறது.

| பிரிவு | பரிகாரம் | ஆள் வரை மதிப்பு ரூ. | நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|
| 42 | ஏற்றதை ஆற்றுக | 75,000.00 | 2250.00 |
| 25(டி) | விளம்புகை | 5,000.00 | 150.00 |
| | | மொத்தம் | 2400.00 |

செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது இன்று விசாரணைக்காக என் முன்பு கொண்டு வரப்பட்டு, வாதிக்காக வழக்கறிஞர் திரு.இ. இராவணசிவன் அவர்களும், 1–ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.T. முத்துலிங்கம் அவர்களும், 2–ம் பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு.டி. பஞ்சாப் சேகர் அவர்களும் ஆஜராகி, 25.09.2020 முதல், விசாரணைக்காக நிலுவையிலிருந்து வந்த இவ்வழக்கில் 16.02.2021 ஆகிய இன்று, வாதி தரப்பில் பிரதிநிதித்துவம் இல்லாமலும், மேலும் வாதி அழைத்தும் ஆஜரின்றியும் இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்பாணை

1. வழக்கானது, வாதியின் வருகை தவறுகையின் காரணமாக தள்ளுபடி செய்யப்படுகிறது.
2.செலவுத் தொகை குறித்து உத்தரவு எதுவும் இல்லை.

(2–ம் பிரதிவாதி தரப்பு செலவுத் தொகை ரூ.560.00)

## செலவு விபரப் பட்டியல்

| வ.எண். | செலவு விபரம் | வாதி | 1ம் பிரதிவாதி | 2ம் பிரதிவாதி |
|---|---|---|---|---|
| 1. | வக்காலத்து மீது முத்திரை கட்டணம் | --- | --- | 10.00 |
| 2. | அறிவிப்பு படி | --- | --- | 50.00 |
| 3. | வழக்கறிஞர் ஊதியம் | --- | --- | 500.00 |
| | மொத்தம் | --- | --- | 560.00 |

<u>தபசில்</u>

பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், கொம்மடிக்கோட்டை உபபதிவு மாவட்டம், சாத்தான்குளம் யூனியன் எல்கைக்குள்பட்ட திருப்பணி புத்தன்தருவை கிராமம், ஷை பஞ்சாயத்து நத்தம் சர்வே 116/29 நம்பர் ஏக்கர் 31.24 ல் மேல்புரம் மனை நிலம் செண்டு 0.66 ம் ஷை மனை நிலத்தில் கட்டியிருக்கிற கடை கட்டிடம் மனை நிலம் வகையறாவுக்குமாக எல்கை,

கிழக்கு – சா.மு.மகுதூம் முகம்மது மீர் அவர்கள் குமாரர் ஜக்கரியா அவர்களுக்கு பாத்தியப்பட்ட 3/140 நம்பர் கடை கட்டிடம் மனை நிலம்,
மேற்கு – கத்தாது வீடு மனை நிலம்.
வடக்கு – கிழமேல் ரோடு.
தெற்கு – கத்தாது வீடு மனை நிலம்.

ஷை எல்கைக்குள்ப்பட்ட மனை கிழமேல் அடி 11 தென்வடல் அடி 26.1/2 க்கு மனை ச.அடி 291.5 க்கு செண்டு 0.66 (மனை ச.மீ.28) உள்ள மனை நிலம் பூறாவும் ஷை மனை நிலத்தில் கட்டியிருக்கிற வடக்கே பார்த்த வாசல் உள்ள காரைக்கட்டு மட்டப்பா கடை கட்டிடம் வகையறாவும் அதில் இணைக்கப்பட்டுள்ள மின் இணைப்பு எண்.916 நம்பர் உள்ளதும் சகலமும் பூறா உள்பட தபசில் விபரம் சரி.

ஷை கடை கட்டிடமானது திருப்பணி புத்தன்தருவை பஞ்சாயத்து 3 வது வார்டு திருப்பணி புத்தன்தருவை பெரிய தெருவில் முன் 141 நம்பர் கடையாக இருந்து நாளது 90 நம்பர் கடையாக இலக்கமிடப்பட்டுள்து.

ஷை தபசில் கடை மனை நிலம் நாளது நத்த சப்டிவிஷன் படி சர்வே 324/4 நம்பர் ெஉறக் 0.00.24 ஆக ஷை எல்கைக்குள் உள்ளது.

வழிகாட்டி மதிப்புப்படி ரூ.75,000, (கடையும் சேர்த்து)

2021 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 16 ஆம் நாளாகிய இன்று என்னுடைய கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(sd) P. Ramesh, 16/2/2021.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.